Dr. (Mrs) S. Uthayarasa
B.A (Hons), M.Phil., Ph.D
Senior Lecturer in Geography
Department of Geography
University of Jaffna
Jaffna Sri Lanka.

உலகப் பொதுமறை

# வள்ளுவம்

தொகுதி–1




தொகுப்பாசிரியர்

**உடையார்கோவில் குணா**

பதிப்பாசிரியர்கள்

முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**

முனைவர் **க.சுஜாதா**

முனைவர் **க.இந்துமதி**

முனைவர் **சி.சங்கீதா**

**செ.தமிழரசி**

**உலகத் திருக்குறள் மாநாடு - 2019**

கோலாலம்பூர் – மலேசியா.

உள்ளத்தனையது உயர்வு

தமிழ்த்தாய் அறக்கட்டளை வெளியீடு-10

# நூல் விவரம்

தலைப்பு : உலகப் பொதுமறை வள்ளுவம் (தொகுதி–1)
(உலகத் திருக்குறள் மாநாட்டு கருத்தரங்கம்)

தொகுப்பாசிரியர் : **உடையார்கோவில் குணா.**

துணை
பதிப்பாசிரியர்கள் : முனைவர் **அ.ஜெஸின் பிரான்சிஸ்**
முனைவர் **க.சுஜாதா**
முனைவர் **க.இந்துமதி**
முனைவர் **சி.சங்கீதா**
**செ.தமிழரசி**

மொழி : தமிழ், ஆங்கிலம்

உரிமை–வெளியீடு : தமிழ்த்தாய் அறக்கட்டளை
மாரியம்மன் கோவில்,
தஞ்சாவூர்–613 501.
தொலைபேசி: 04362268167
கைபேசி: 9443938797, 7530002454.

அளவு : டெம்மி

பக்கங்கள் : 318

விலை : ரூ.250/–

ISBN : **978-81-909877-5-2**

நூல் வடிவமைப்பு: பரிதி பதிப்பகம்,
சோலையார்பேட்டை.
வேலூர் மாவட்டம்.
கைபேசி: 8098908840, 7200693200

# திருக்குறள் காட்டும் விவசாய சமூகம்

திருமதி சுபாஜினி உதயராசா,

12

உலகப் பொதுமறை என அழைக்கப்படும் திருக்குறளானது பல்வேறு துறை சார்ந்தவர்களும் பயன்படுத்தி பயன்பெறக்கூடிய முறையில் திருவள்ளுவரால் இயற்றப்பட்டுள்ளது. சிறப்பாக இந்நூலில் அரசியல் சமூகம், பொருளாதாரம், புவியியல், பண்பாடு, சூழல், விவசாயம், மக்கள் வாழ்க்கை முறைகள் போன்ற பல்வேறு பிரிவுகளையும் உள்ளடக்கி ஆயிரத்து முந்நூற்றுமுப்பது குறட்பாக்கள் உள்ளன. திருவள்ளுவர் ஈரடியைக் கொண்ட குறட்பாக்கள் மூலம் தான் கூறவந்த கருத்தை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார். குறிப்பாக தான் வாழ்ந்த காலத்தில் பல்வேறு வகையான சமூகத்தை சேர்ந்த மக்கள் வாழ்ந்துள்ளதை பல்வேறு குறட்பாக்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். எடுத்துக்காட்டாக திருவள்ளுவர் கால மக்கள் வாழ்க்கை முறைகளை அதாவது மக்களால் மேற்கொள்ளப்படும் தொழில்களை அடிப்படையாகக் கொண்டே சமூக அமைப்புக்கள் தோற்றம் பெற்றிருந்தன. உதாரணமாக விவசாய சமூகம், தச்சுத்தொழில் செய்யும் சமூகம், வேட்டையாடுதல் சமூகம், இறைச்சி விற்றல் சமூகம், சிகைஅலங்காரத் தொழில் செய்யும் சமூகம், ஆசிரியர் பணிசெய்யும் சமூகம் என பல சமூகக் குழுக்களை எடுத்துக்காட்டலாம். இதில் விவசாய சமூகத்தில் பயிர்ச்செய்கையில் ஈடுபடும் சமூகத்தினர், மீன்பிடியில் ஈடுபடும் சமூகத்தினர், கால்நடைவளர்ப்பு அல்லது விலங்கு வேளாண்மையில் ஈடுபடும் சமூகத்தினர், காடு தொடர்பான தொழில்களில் ஈடுபடும் சமூகத்தினர் என நான்கு பிரிவான சமூகத்தை எடுத்துக்காட்டியுள்ளார். இந்த வகையில் இக் கட்டுரையானது திருக்குறள் காட்டும் விவசாய சமூகம் பற்றிய கருத்துக்களை குறிப்பாக பயிர் செய்கையில் ஈடுபடும் சமூகத்தினர் பற்றி தெளிவாக ஆராய்கிறது. பயிர் செய்கையை திருக்குறளில் திருவள்ளுவர் உழவுத்தொழில் எனக் குறிப்பிட்டுள்ளார். எல்லாத்

தொழில்களிலும் உழவுத்தொழிலே சிறந்ததும், முதன்மையானதும் என்று பின்வரும் குறட்பாவில் கூறியுள்ளார்.

**'சுழன்று - ஏர்ப்பின்னது உலகம் அதனால்**
**உழந்தும் உழவே தலை'** (குறள் 1031)

பயிர்ச்செய்கையில் ஈடுபடும் உழவர் சமூகத்தினரை திருவள்ளுவர் மூன்று வகையினராகப் பிரித்துள்ளார். அவர்கள் பின்வருமாறு,

1. தம் சொந்த நிலத்தைத் தாமே உழுது பயிரிட்டு உண்டு வாழ்பவர்.

2. சொந்த நிலம் இல்லாதவர்கள் - வேறு தொழில் செய்யும் நிலச் சொந்தக்காரரிடம் நிலத்தை குத்தகைக்குப் பெற்று உழுது பயிரிட்டு உண்டு வாழ்பவர்.

3. சொந்தநிலம் இல்லாதவர்கள் - நிலச் சொந்தக்காரர் மேற்பார்வையில் நெற்கூலிக்கோ, பணக்கூலிக்கோ உழுது பயிரிட்டு அக் கூலி பெற்று உண்டு வாழ்பவர்கள்.

இதனை திருவள்ளுவர் பின்வரும் குறட்பா மூலம் தெளிவுபடுத்தியுள்ளார்.

**'உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார் மற்றெல்லாம்**
**தொழுதுண்டு பின்செல்பவர்' (குறள் 1033)**

பயிர்செய்கை நிலங்களில் பயிர்செய்யும்போது களைகள் பரவும். களைகள் தோன்றினால் விளைச்சல் சரியாகக் கிடைக்காது. இதுபோல் நல்லவர்கள் மத்தியில் தீயவர்கள் தோன்றினால் அச் சமூகம் சீரழிந்துபோகும் என்பதனை பின்வரும் குறட்பாவின் மூலம் தெளிவாகக் கூறியுள்ளார்.

**'கொலையின் கொடியாரை வேந்தொறுத்தல் பைங்கூழ்**
**களை கட்டதனொடு நேர்' (குறள் 550)**

இந்தப் பூமியிலே பல்வேறு சமூகத்தினர் வாழ்ந்து வந்தாலும் உழவுத்தொழிலில் ஈடுபடும் விவசாய சமூகத்தினர் இல்லாவிட்டால் இந்த உலகில் யாரும் உயிர்வாழ முடியாது என்பதை திருவள்ளுவர் 'உழவர்கள் சேற்றில் கை வைக்கவில்லையென்றால் மற்றெவரும் சோற்றில் கைவைக்க முடியாது' எனக் குறிப்பிட்டுள்ளார். இக் கூற்றின்மூலம் உழவர் சமூகத்தின் முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்துக்காட்டியுள்ளார்.

திருவள்ளுவர் விவசாய சமூகத்தின் சிறப்பை அறிவியல் முறையிலும் விளக்கியுள்ளார்.

**'தொடிப்புழுதி கஃசா உணக்கின் பிடித்து எருவும்**
**வேண்டாது காலப் படும்'** **(குறள் 1037)**

**'ஏரினும் நன்றால் எரு இடுதல் கட்டபின்**
**நீரினும் நன்று அதன் காப்பு'** **(குறள் 1039)**

**'இலம் என்று அசைஇ இருப்பாரைக் காணின்**
**நிலம் என்னும் நல்லாள் நகும்'** **(குறள் 1040)**

ஆகிய குறட்பாக்களில் ஒரு நிலத்தை உழுதவன் ஒரு பலம் புழுதி கால் பலம் புழுதி ஆகின்ற வரைக்கும் நிலத்தைக் காயவிட வேண்டும். அவ்வாறு காயவிட்டால் ஒரு பிடி எருவும் இல்லாமல் பயிர் நன்றாக செழித்து விளையும். ஏர் உழுவதைவிட எருஇடுதல் நல்லது.

வள்ளுவரின் வாக்குக்கிணங்க பண்டைய உழவர்கள் நிலத்திற்கு இலை தழைகளைக் குழிகளில் இட்டு மக்கவைத்து இயற்கையான சூழ்நிலையில் இயந்திரங்களின் துணைகொண்டு பயிர்நடுதல், களைபறித்தல், நீர் பாய்ச்சுதல் போன்ற உழவாரப் பணிகள் நிகழ்த்தப்பட்டுள்ளன. தற்போதைய காலச்சூழ்நிலையில் உழவுத்தொழில் செய்பவர்களை உயர்வாக மதிப்பதில்லை என்பது கசப்பான உண்மை நிலையாகும். கிராமத்தைச் சார்ந்து வாழ்கின்ற மக்கள் வசதிவாய்ப்புக்கள் எதுவுமில்லாமல் பின்தங்கிய நிலையிலேயே தங்களது வாழ்க்கையை நடத்தி வருகின்றனர். ஆனால் வளர்ச்சிகண்டுள்ள மேலைநாடுகளில் விவசாயம் சார்ந்து வாழும் மக்கள் நகர்ப்புற வாய்ப்புக்களையும் பெற்று வாழாவிட்டாலும் இயன்றளவு அடிப்படை வசதிவாய்ப்புக்களையேனும் பெற்று வருகின்றனர். இவற்றின்மூலம் விவசாய சமூகத்தின் நிலையை எடுத்துக்காட்டியுள்ளார்.

விவசாய சமூகத்தை வள்ளுவர் உலகின் அச்சாணி எனக் குறிப்பிட்டுள்ளார். விவசாயம் இல்லையேல் உலகம் இல்லை என்பதை வலியுறுத்தியுள்ளார். இயங்கிக்கொண்டிருக்கும் இவ்வுலகமே தன் நிலை கலங்கி நிற்கச்செய்துவிடும் அளவிற்கு

வல்லமை வாய்க்கப் பெற்றவர்கள் விவசாயிகள் என்றார். எனவேதான் உலகம் என்னும் பெருந்தேர் ஓட விவசாயிகள் என்ற அச்சாணி தேவை என்பதை,

**'உழுவார் உலகத்தார்க்கு ஆணிஅஃது ஆற்றது**
**எழுவாரை எல்லாம் பொறுத்து' (குறள் 1032)**

என்ற குறள் மூலம் விவசாயத் தொழிலையும் விவசாயச் சமூகத்தினரையும் இவ்வுலகின் முதுபெலும்பாக வள்ளுவர் பிரகடனப்படுத்துகின்றார்.

ஒரு நாடு எந்தத் துறையில் முன்னேறினாலும் மக்களின் அடிப்படைத் தேவையான உணவு. உடை, உறைவிடம் அவசியமாகும். உயிரினங்களின் முதல் தேவையான உணவுத் தேவையை நிறைவு செய்திட விவசாயத் துறையில் தன்னிறைவு பெறாத எந்த நாட்டையும் வளர்ச்சியடைந்த சுயசார்புமிக்க வளமான நாடாக கருதமுடியாது. வளர்ந்த நாடுகள் என்று தற்பொழுது கருதப்படும் அனைத்த நாடுகளும் விவசாயத்துறையில் தன்னிறைவு பெறுவதோடு மட்டுமல்லாமல் அத் தொழிலின் வாயிலாக அயல் நாடுகளுக்கு தேவையான உணவினையும் வழங்கி வருகின்றது. இந்த வகையில் விவசாய சமூகமே நாட்டின் உயிர்நாடி என்பதை வள்ளுவர் எடுத்துக்காட்டுகின்றார்.

இவ்வாறாக இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நமது முன்னோர்கள் விவசாயத் தொழிலில் சிறந்து விளங்கியுள்ளார்கள் என்பதை திருவள்ளுவர் பல்வேறு குறட்பாக்கள் மூலம் எடுத்துக்காட்டியுள்ளார். இதனையே இக்கட்டுரையானது திருக்குறள் காட்டும் விவசாயச் சமூகம் என்ற தொனிப்பொருளில் பல்வேறு குறட்பாக்கள் மூலம் ஆராய்ந்து தெளிவுபடுத்தியுள்ளது.

**திருமதி சுபாஜினி உதயராசா,**
புவியியல்துறை,
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்,
இலங்கை.